பால் வழங்கு இயந்திரங்கள்

*25. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காசு போட்டவுடன் பால் வழங்கக்கூடிய சிறிய இயந்திரங்களை சென்னை நகரில் முக்கிய இடங்களில் வைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது.

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.

MR. SPEAKER: Before we take up the next item in the Agenda, I have to announce to the House that I have received five notices under Rule 55 (1) of the Tamil Nadu Legislative Assembly Rules expressing want of confidence in the Ministry headed by the Hon. Thiru M. Karunanidhi. The notices are from Dr. H. V. Hande, Thiru K. T. K. Thangamani, Thiru A. R. Marimuthu, Thiru A. Subramaniam, Thiru R. Ponnappa Nadar and Thirumathi T. N. Anandanayaki.

Under Rule 55 (2) of the Assembly Rules, leave of the House has to be obtained. I shall read Rule 55 (2):—

" If the Speaker is of opinion that the motion is in order, he shall read the motion to the House and shall request those members who are in favour of leave being granted to rise in their places and if not less than twenty-four members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days